<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 56/2019** **நாள்: 16.04.2026** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சல்மான் | தொழில் | : வியாபாரம் |
| த/பெ | : அப்துல் காதர் | கிராமம் | : திருச்சூர் |
| வயது | : 57 | தாலுகா | : திருச்சூர் |
| | | மாவட்டம் | : திருச்சூர், கேரளா |

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**

**<u>முதல் விசாரணை –</u>**

நான் இந்த வழக்கில் 5வது வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 20.07.2009 தேதியிட்ட அடமான பத்திரம் அசல்

வா.சா.ஆ.2 – 01.01.2004 தேதியிட்ட அதிகார பத்திரத்தின்  சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3 – மனோகர் என்பவரின் இறப்பு சான்றிதழ் புகைப்பட நகல்

வா.சா.ஆ.4 – மேற்படி மனோகரின் வாரிசு சான்றிதழ் புகைப்பட நகல்

வா.சா.ஆ.5 – 02.01.2019 தேதியிட்ட எனது தகப்பனார் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்

வா.சா.ஆ.6 – மேற்படி அறிவிப்பை 1வது பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை

வா.சா.ஆ.7 – மேற்படி அறிவிப்பை 2வது பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்தது. அந்த அறிவிப்பு உறையுடன் கூடியது.

வா.சா.ஆ.8 – 1வது பிரதிவாதியின் பதிலறிவிப்பு

வா.சா.ஆ.9 – எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் புகைப்பட நகல்

வா.சா.ஆ.10 – எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் புகைப்பட நகல்

வா.சா.ஆ.11 – 2வது பிரதிவாதியின் இறப்பு சான்றிதழ் புகைப்பட நகல்

வா.சா.ஆ.12 – எனது தாயார் கதீஜா பேகத்தின் இறப்பு சான்றிதழ் புகைப்பட நகல்

வா.சா.ஆ.13 – 13.10.1996 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.16 15:20:42 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.